ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# கீரனூர் ஜாகிர்ராஜா புதினங்கள் காட்டும் இஸ்லாமிய வாழ்வியல்

**பா. சாதிக்பாஷா**
**சி. அப்துல் அக்கீம் கல்லூரி, மேல்விஷாரம்**

## ஆய்வுச்சுருக்கம்

சங்கம் தொட்டு இன்றளவும் தமிழ்த்தாய் தன்னகத்தே தொன்மை மாறாமல் புதுமையைப் புகுத்திச் செல்கிறாள். காலம் பல கண்டாலும் யுகத்தின் புதுமையைச் சுவை நயம் குன்றாமல் சுவைத்து உள்வாங்கி காட்சி தருகிறாள். அப்புதுமையின் நீட்சியே புதினமும் ஒன்றாகும். அப்புதினத்தில் பல வகைகளையும் நீட்சிகளையும் இன்று தமிழிலக்கியம் கண்டுள்ளது. இவ்வாரறு ஓங்கி வளரும் தமிழ் புதிய இலக்கிய வகைகளுடன் பல சமயத்தவரின் தமிழ்த் தொண்டையும் தன்னகத்தே புகுத்திக் கொண்டவளே எனலாம். அத்தகு தமிழுக்கு இஸ்லாமியச் சமயம் செய்த தமிழ்ப்பணி போற்றுதலுக்கு உரியது. குறிப்பாக புதினப்படைபில் ஆசிரியர் கீரனூர் ஜாகிர்ராஜா எனும் இஸ்லாமிய எழுத்தாளர்> பத்து நாவல்களையும்> ஆறு சிறுகதைத் தொகுப்புகளையும் இன்ன பிற தமிழ் இலக்கியப் பணிகளை தற்போது படைத்து வளரும் எழுத்தாளராகத் தன்னை அடையாளப்படுத்தி வருகிறார். அப்புதினங்களின் வழியே இஸ்hலமிய சமூகத்தின் சில அவிழ்க்க முடியாத கட்டமைப்பைப் பகிரங்கப்படுத்திய கதைக்களத்தை ஆராயவதே இந்த ஆய்வின் நோக்கம்.

## திறவுச்சொற்கள்

ராதியம்மா – தந்தையைப் பெற்றவள் ( பாட்டி)> நண்ணியம்மா – தாயைப் பெற்றவள் ( பாட்டி)> ஊன் – மாமிசம்

**முன்னுரை**

கீரனூர் ஜாகிர்ராஜா தமிழக இஸ்லாமிய எழுத்தாளர்களுள் தற்போது தவிர்க்க முடியாத ஒரு இடத்தைப் பிடித்துள்ளார். அவருடைய படைப்புகள் சாதாரண விளிம்பு நிலை மக்களைக் குறிப்பவையாகவே அமைந்துள்ளன. குறிப்பாக இதுவரை இஸ்லாமியர்களைப் பற்றி அறிந்திராத பல கோணங்களை மையமிட்டு இவருடைய கதைப் போக்கு அமைந்துள்ளது. அவற்றோடு இஸ்லாமியக் கட்டமைப்பு மற்றும் கடமைகள் எனப் பல நிலைகளை விரிவுப்படுத்திச் செல்கிறது. அதே போல் இவர் கதை சொல்லும் நடையும்> கதைக்களமும் சொற்களைப் பயன்படுத்தும் விதமும் என புதின இலக்கியத்தை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்கிறது எனலாம்.

**கீரனூர் ஜாகிர்ராஜா பிறப்பும்> இளமையும்**

கீரனூர் ஜாகிர்ராஜா பழனிக்கும் தாராபுரத்திற்கும் இடையுள்ள கீரனூரில் ஒரு தமிழ் முஸ்லிம் குடும்பத்தில் 08-10-1962 அன்று சதக்கத்துல்லா மெஹருன்னிஸா பீவீ இணையருக்குப் பிறந்தார். தொப்பம்பட்டி ஊராட்சி ஒன்றிய முஸ்லீம் ஆண்கள் துவக்கப்பள்ளி கீரனூரில் ஆரம்பக்கல்வியும்> கீரனூர் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் மேல்நிலைப்பள்ளியை முடித்தார். பிறகு பழனி> கீரனூர்> திருப்பூர் என வெவ்வேறு ஊர்களில் இமைக் காலம் கழிந்தது. 1996 –ல் ராஜி (எ) சல்மா பானுவை மணந்தார் குழந்தைகள் ஆயிஷா முத்தமிழ்> முகமது பாரதி ஆவர்.

**படைப்புகள்**

கீரனூர் ஜாகிர்ராஜாவின் முதல் படைப்பு ‘பாரம்’ என்னும் சிறுகதை 1995-ல் தஞ்சையில் ‘சுந்தரசுகன்’இதழில் வெளியானது. பிறகு 2004-ல் ‘செம்பருத்தி பூத்த வீடு’
என்னும் சிறுகதைத் தொகுப்பு> 2006-ல் மீன்காரத் தெரு எனத் தொடங்கி தற்போது> பத்து நாவல்கள்> ஆறு சிறுகதைத் தொகுப்பு நூல்கள்> நான்கு கட்டுரை நூல்கள்> ஏழு தொகை நூல்கள்> இரண்டு குழந்தை இலக்கியம் என தற்போது முழுநேர எழுத்தாளராக உள்ளார்.

**பெற்றுள்ள விருதுகள்**

சிறுபான்மை-இஸ்லாம் என்னும் இவரது தொகுப்பு நூலை சாகித்திய அகாதெமி வெளியிட்டுள்ளது> அவற்றுடன் கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் புனைவு விருது> தி இந்து குழுமத்தின் லிட்ஃபார் லைஃப் விருது, சேலம் தமிழ்ச் சங்கம் விருது> விகடன் விருது( இரண்டு முறை 2010 மற்றும் 2020)> உயிர்மை – சுஜாதா அறக்கட்டளை விருது> ஏலாதி இலக்கிய விருது, சென்னை இலக்கிய வீதி வழங்கிய அன்னம் விருது> என இன்னும் பல விருதுகளை கீரனூர் ஜாகிர்ராஜா பெற்றுள்ளார்.

**கீரனூர் ஜாகிர்ராஜாவின் இஸ்லாமிய கதைக்களம் வாழ்வியலும்**

பறந்து விரிந்துள்ள தமிழ்ப் படைப்புகளில் பெரும்பாலான ததைமாந்தார்கள் இஸ்லாமியர்களைத் தவிர்த்தே உள்ளது. அதற்குக் காரணம் அவர்களை ஒதுக்கியதாகக் கொள்ள முடியாது. அவர்களின் இல்லற வாழ்வியலை பெரும்பாலனோர் அறிய முடியாமையே ஆகும்.

**“எங்களால் பிராமண கலாச்சாரத்துக்குள்ளே கூட ஊடுருவிப் போய்விட**
**முடிகிறது. ஆனால் இஸ்லாம் அப்படி இல்லையே”1 …?**

என்று நாஞ்சில் நாடான் அவர்கள் பதிவு செய்துள்ளார். அதே போல்

**“தமிழ்நாட்டுக் கதைகளில் முஸ்லிம் வாழ்க்கை சித்தரிக்கப் பெறாததற்கு**
**முதல் காரணம் தமிழ் எழுத்தாளர்கள் அவர்களைப் பற்றித் தெரிந்து**
**கொள்ளாததுதான்” 2**

என்று எழுத்தாளர் அகிலனின் கருத்தாகக் கவிஞர் இன்குலாப் பதிவு செய்துள்ளார். இவ்வாறு மறைக்கப்பட்ட திரையின் விளக்கமாய் தற்போது இஸ்லாமிய எழுத்தாளர்கள் பலர் தோன்றி பல இஸ்லாமியக் குடும்ப கதைக்களத்தைக் கொண்டு படைப்புகள் பல செய்துள்ளனர்.

அத்தகு எழுத்தாளர்களில் ஒருவரான கீரனூர் ஜாகிர்ராஜா - வின் இஸ்லாமிய கதைக்களம் வாழ்வியலும் தற்போது காண்போம்.

**மீன்காரத் தெரு புதினம்**

இஸ்லாமியர்கள் என்றாலே தூய்மையான வெண்ணிற ஆடையும்> ஐந்து வேளை தொழுகையும்> பல தேசத்துப் பயணமும்> பகட்டான வாழ்வும்> மூவேளையும் ஊன் உணவும் என்ற பொதுப் புத்தியை அவரது முதல் படைப்பான மீன்காரத் தெருவில் உடைத்தெறிந்து உள்ளார் என்பதே உண்மை. ஏழ்மையில் வாடும் சேரி வாழ் இஸ்லாமியர்களின் தினசரி வாழ்க்கை நிகழ்வை மையமாகக் கொண்டு தொடங்குகிறார். ஏழ்மையும் ஓலமும் நிறைந்த மீன்காரத் தெருவில் மக்கள் படும் துயரம்> இயலாமை> குடும்ப சிக்கல்> சமுகத்தின் சீர்கேடு> மேல் வர்க்கத்தால் நசுக்கப்படும் சேரி வாழ் பெண்களின் நிலை என பெரிய கட்டமைப்பை உடைத்து இதுவரை இஸ்லாமியர்கள் பற்றி அறிந்திராத ஒரு புதிய கோணத்தை மீன்காரத் தெரு காட்டியுள்ளது எனலாம்.

**“பிறந்த குழந்தையின் முதல் அழுகை சத்ததத்தை தேவ சங்கீதத்தைப்**
**போலக் கேட்டுத் தெருவே கொண்டாடியது” 3**

எனக் கதை நைனாவின் வீட்டில் தொடங்குகிறது. போக்கிரியாக சுற்றும் நைனா> அவளின் சகோதரி ஆமினா பெரியவர் வீட்டில் வேலைக்குச் செல்வதும். சென்ற இடத்தில் முதலாளியின் மகனால் ஏமாற்றப் படுவதும்> நைனாவின் திருமண வாழ்வைத் தாண்டி நண்பனின் சகோதரியுடன் ஏற்பட்ட காதல் இவற்றோடு முதலாளிகளுடன் இவன் செய்யும் போக்கிரித் தனத்துடன் கடைசிவரை மீன்காரத் தெருவின் வீழ்ச்சத்தை கதை முழுக்க காட்டியுள்ளார் கீரனூர் ஜாகிர்ராஜா. இவற்றோடு தொழிலால்> நிறத்தால்> மொழியால்> வறுமையால்> வன்மத்தால் கதை முழுக்க தன் தீவிரத்தைக் காட்டி கதையை நகர்த்திச் சென்றுள்ளார். கதை முடிப்பு அவர்கள் இருந்து வாழும் அதே நிலையிலேயே முடித்துள்ளார்.

**கருத்த லெப்பை புதினம்**

இஸ்லாம் என்பது உருவ வழிப்பாட்டை ஒப்புக்கொள்ளாத சமுகம் ஆகும். ஆனால் கீரனூர் ஜாகிர்ராஜா அமீது என்ற பாத்திரப் படைப்பின் மூலம் தீர்க்கதரிசிக்கு இக்கதையில் உருவம் தொடுத்து மிகப் பெரிய பரபரப்பை தம் இரண்டாம் கதையில் ஏற்படுத்தியது வியப்புக்குரியதே.

கருத்த லெப்பை இருபது வயது மதிக்கத் தக்க இளைஞன் ஆவான். ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்த இவன் வயது முதிர்ந்தும் இன்னும் வேளைக்கு ஏதும் செல்லாமல் தாய் முருக்கு பிழிந்து வரும் வருமானத்திலும்> தந்தை ராவுத்தர் கம்பெனியில் வேலை செய்து வரும் குறைந்த வருமானத்திலும் குடும்பம் நடந்தது. இவற்றோடு வீணாக ஊர் சுற்றுவதுடன் அமீரிடம் அவ்வப்போது ஏதேனும் சிலை செய்து தரும்படி கேட்டு அதை வீட்டில் கொண்டு வந்து வைத்துக் கொள்வதும். அவ்வப்போது அவன் தாய் கேட்க.

**“உருவமாச் செய்யிறத வாங்கிட்டு வர்றியே உருவம் நமக்கு ஆகுமாடா**

**பாத்துமாவுக்கு பேசிவிட்டு மூச்சு வாங்கியது நீயும் நானுங்கூட**

**உருவம் தானேம்மா”** 4

இவ்வாறு முற்போக்கு பேசுவதும் இவற்றோடு குடும்பச்சிக்கல்> ஏழ்மை> மணக்குழப்பம்> சமயத்தில் உள்ள பாகுபாடு> ராதியம்மா மற்றும் நண்ணியம்மா இருவரின் வேறுபட்ட அன்பு இவைகளோடு ஒவ்வொரு நெடியும் அவன் சகோதரி ருக்கையாவின் காய்ந்த வாழ்வைப் பற்றிய துயரமும்> அதே சமயம் எதார்த்தம் நிறைந்ததாகவும் கதை முழுக்க நகர்த்திச் சென்றுள்ளார். சில இடங்களில் இஸ்லாயமிர்க்கு எதிரான நிகழ்வுகள் இருப்பினும் பல இடங்களில் இஸ்லாமியர்களின் கடமைகளை பெரும்பாலான கதாபாத்திரங்களைக் கொண்டு முழுமைப் படுத்தியுள்ளார். இவ்வாறு கதை தொடக்கமும் மையமும் கதை நகரக் கடைசியாக உச்சத்தைத் தொடுகிறது.

“**தொறகுச்சியைக் கொண்டு தோட்டத்து வீட்டைத் திறந்தான் களிமண்**

**உருவம் கம்பீரமாக நின்றிருந்தது. ராதிம்மா சொல்லச் சொல்ல கருத்தலெப்பை வரைந்திருந்ததை அமீது ஒரு கை தேர்ந்த ஸ்தபதியின் லாவகத்துடன் களிமண் சிலையாக்கி இருந்தார்.கருத்தலெப்பைக்கு நெஞ்சு படபடக்கத் தொடங்கியது. இனம் புரியாத பயம் ஆட்கொண்டு தலை கிறுகிறுத்தது.” 5**

**“வீட்டுக்கு வெளியே தோட்டத்தில் கொண்டு வந்து நிறுத்தினான். ‘இப்படித்தான் இருப்பாரா அவர்’என்று வியந்தான். தேர்ந்த வர்ணங்களைக் கொண்ட கலை நுட்பத்துடன் இதை நிறைவு செய்திருக்கிற அமீதுவின் கைகளை முத்தமிடத் தோன்றியது அவனுக்கு’ 6**

அதே சமயம் மழைப்பொழிவு தொடங்கியது அந்த நொடியில்

**“ மறுவினாடி எங்கிருந்தோ வீசப்பட்ட கல் ஒன்று அவன் தலையைப் பதம் பார்த்ததை உணர்ந்தான். தொடர்ந்து பல திக்குகளிலிருந்தும் அவன் மீது கற்கள் வந்து விழுந்த வண்ணமிருந்தன. அவனால் நிலை கொள்ள முடியவில்லை. தலையில் பலமாக விழுந்த அடியில் குருதி வழிந்தது.” 7**

**“மழையில் சிலை கரைந்துகொண்டிருந்தது” 8**

இவ்வாறாக கீரனூர் ஜாகிர்ராஜா கதையின் முடிவை வைத்து பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியது குறிப்பிடத்தக்கவை ஆகும்.

**துருக்கித்தொப்பி புதினம்**

இரண்டாம் நாவலுக்குப் பிறகு ஆறுமாத இடைவெளியில் தொடங்கப்பட்ட நாவல் இது. இந்த நாவலைப் படிக்கத் தொடங்கும் முன் தன் படைப்பின் தொகுப்பில் சற்றே மாறுபட்ட கதைக்களம் கொண்டுள்ளது இதை கீரனூர் ஜாகிர்ராஜா.

**“குடும்ப அமைப்பில் நிகழும் பல அந்தரங்கங்கள்> வன்முறைகள்> அகம் சார்ந்த உணர்வலைகள் நாகரிகம்**

**கருதியோ சொல்லக்கூசியோ வேகவேகமாகப் புதைக்கப்பட்டு விடுகின்றன. ஆனால் நம் மனம் அதை அடிக்கடி தோண்டி எடுத்து முகர்ந்து பார்த்து மறுபடியும் மண்ணைப் போட்டு மூடிவைத்தபடியே இருக்கிறது. இந்த நாவலில் நான் மிக நெருக்கமாக இருந்து அவதானித்த ஒரு குடும்பத்தின் வாழ்வையும் வீழ்ச்சியையும் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள முயற்சித்திருக்கிறேன்"9**

என்று கீரனூர் ஜாகிர்ராஜா கொடுத்த முன்னுரை கதையின் முழுமையை ஓரளவுக்கு யூகிக்க முடிகிறது.

எட்டுக்கல் பதித்த ஒரு பெரிய வீட்டின் குடும்பத் தலைவர் துருக்கித் தொப்பி அணிந்திருக்கும் கே.பி.ஷே ஆவார். அவருடைய மனைவி பட்டம்மாள் (சகர்பான் பீவீ) சற்று அடாவடியானவளும் கூட. மகன் அத்தாவுல்லா அவன் மனைவி நூர்ஜஹான்.

**"உச்சிமுதல் பாதம்வரை சொக்கத்தங்கம் பூட்டி காஞ்சிபுரத்;துப் பட்டினால் தன் மேனி மூடி நூர்ஜஹான் பழனியூர் பிளஷரில் வந்து எட்டுக்கல் பதிச்ச வீட்டில் இறங்கினாள்" 10**

எனச் சுபமாக தொடங்கும் இந்தக் கதைப் போக்கு காலப் போக்கால் குட்டிலெவையின் மகள் அந்தக் குடும்பச் சூழலை எவ்வாறு மாற்றுகிறாள் என்பதும். அவற்றோடு நூர்ஜஹானின் நிறைவேறாத முந்தைய அப்பாஸ் மீதான காதல். அவ்வாறு இருப்பினும் தன் தந்தையின் பிடிவாதத்திற்காக வேறு வழியின்றி எட்டுக்கல் பதித்த இந்த வீட்டுக்கு வந்தாள். பல்வேறு குடும்பசிக்களுடன் தொடங்கும் அவளின் வாழ்க்கை காலங்கள் பல சென்றபின் மாமியாரின் அதிகாரம் குறைந்தது. வீடு இரண்டாகப் பிரிக்கப்படுகிறது> என இல்லற நிகழ்வு கதைக்களத்தை நீட்டுகிறது. கடைசியாக கே.பி.ஷே-வின் நிலை> அத்தாவுல்லாவின் வெளியூர் வேலை> இரண்டு பிள்ளைகளோடு நூர்ஜஹான் படும் துயரம் என வீழ்ச்சியில் கதையை முடித்துள்ளார் ஆசிரியர்.

ISSN:2582-9599



**வடக்கேமுறி அலிமா புதினம்**

**"கொச்சி ஜியு டவுனில் இலக்கம் 162-ல் வடக்கேமுறி வீடு கம்பீரமாக களையாக நிற்கிறது." 11**

அந்த வீட்டில் பிறந்த அலிமாவை சுற்றியே இந்த நாவலின் கதைக்களம் தொடங்குகிறது. பெண் கதாபாத்திரத்தை இதுவரை யாரும் பயன்படுத்தாத பல பரிமாணங்களில் ஆசிரியர் பயன்படுத்தி இருக்கிறார் எனலாம். தன் கதாபாத்திரத்தைப் பற்றி ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**"பைத்தியம்> திருடி> கஞ்சா விற்பவள்> கொலைகாரி> சி.ஐ.டி அதிகாரி> வாழ்ந்து கெட்டவள்> காதலனால் வஞ்சிக்கப்பட்டவள்> தலாக் கொடுக்கப்பட்டவள்> சினிமா வாய்ப்புத் தேடி சோரம் போனவள்" 12**

மேற்கண்டவாறு கதை தொடங்குகிறது. அஹமதுகுட்டி> பாத்துமாவின் இணையருக்கு மகளாகப் பிறந்த அலிமா குறிப்பிட்ட வயதுக்கு பிறகு தாந்தோரி தனமாக வாழத் தொடங்கிவிட்டாள்.

இவள் இப்படி ஆனதற்கு முதலில் முஸ்லியார் காரணமாக இருந்தாலும். அவன் விட்டுச்சென்ற பின் அவளின் வாழ்க்கை தடம் மாறுகிறது. அவளுக்குப் புத்தி பேதலித்து விட்டது என மனநலக் காப்பகத்தில் சேர்த்து சில நாள் அங்கிருந்து பிறகு தப்பித்து மணம் போன வாழ்கை வாழ தொடங்கி பல இடர்களையும்> சிக்கல்களையும்> துன்பங்களை> பல இடர்களை நம் கண்முன் கதைக்களம் வழியாகக் கொண்டு வருகிறார். பார்க்கக்கூடாத> கேட்கக்கூடாத> எல்லா தவறுகளையும் செய்து முடித்துப் பல இடங்களில் வாழ்வின் முழுமையை உணர்ந்த நிலையில் அலிமாவின் பாத்திரப்படைப்பு அமைந்துள்ளது.

ஒரு பெண்ணிய கதாபாத்திரத்திரத்தை தலைமை பாத்திரமாகவும்> ஆணுக்கு நிகராகவும் படைத்து அடுத்த நிலைக்கு ஆசிரியர் கொண்டு சென்றுள்ளது வியப்பின் உச்சம் எனலாம்.

## முடிவுரை

கீரனூர் ஜாகிர்ராஜா தம் படைப்புகளின் வழியே இன்றைய இசுலாமிய எழுத்தாளர்களில் தவிர்க்க முடியாத ஒரு இடத்தை பிடித்துள்ளார். சமுதாயத்தில் தான் கண்ட கேட்ட தன்னை சுற்றி நடந்த நிகழ்வுகளையும் அவற்றோடு தான் வாழும் பகுதியிலேயே தம் கதைக்களத்தை அமைத்துக் காட்டியுள்ளது தனிச்சிறப்பு பெற்றுள்ளது. அதே சமயம் தன்னுடைய கதைகளில் தன் வாழ்வின் அனுபவத்தையும் அவர் புகுத்தியுள்ளார் என்பதை.

> **"என் நாவலில் இடம்பெற்றுள்ள சில சம்பவங்கள் என் மனதில் நீண்டகால அழுத்தத்தை அளித்தவாறே உள்ளிருந்தவை. அவற்றை இழுத்தில் எடுத்து வைத்தபிறகு விடுதலை பெற்ற உணர்வேற்பட்டது" 13**

## சான்றெண் விளக்கம்

1. காஃபிர்களின் கதைகள் - கீரனூர் ஜாகிர்ராஜா ப.எண்: 11
2. காஃபிர்களின் கதைகள் - கீரனூர் ஜாகிர்ராஜா ப.எண்: 12
3. மீன்காரத் தெரு - கீரனூர் ஜாகிர்ராஜா ப.எண்: 7
4. கருத்த லெப்பை - கீரனூர் ஜாகிர்ராஜா ப.எண்: 10>11
5. கருத்த லெப்பை - கீரனூர் ஜாகிர்ராஜா ப.எண்: 69
6. கருத்த லெப்பை - கீரனூர் ஜாகிர்ராஜா ப.எண்: 69
7. கருத்த லெப்பை - கீரனூர் ஜாகிர்ராஜா ப.எண்: 69
8. கருத்த லெப்பை - கீரனூர் ஜாகிர்ராஜா ப.எண்: 69
9. துருக்கித் தொப்பி - கீரனூர் ஜாகிர்ராஜா ப.எண்: 1
10. துருக்கித் தொப்பி - கீரனூர் ஜாகிர்ராஜா ப.எண்: 10
11. வடக்கேமுறி அலிமா - கீரனூர் ஜாகிர்ராஜா ப.எண்: 9
12. வடக்கேமுறி அலிமா - கீரனூர் ஜாகிர்ராஜா ப.எண்: 8
13. துருக்கித்தொப்பி - கீரனூர் ஜாகிர்ராஜா ப.எண்: 1

**துணை நூற்பட்டியல்**

1. மீன்காரத் தெரு>
கீரனூர் ஜாகிர்ராஜா>
எழுத்து பிரசுங்கம்>
அண்ணா நகர்> சென்னை – 40

2. கருத்த லெப்பை>
கீரனூர் ஜாகிர்ராஜா>
எழுத்து பிரசுங்கம்>
அண்ணா நகர்> சென்னை – 40

3. துருக்கித் தொப்பி>
கீரனூர் ஜாகிர்ராஜா>
விஜயா பதிப்பகம்>
ராஜ வீதி> கோயம்புத்தூர் - 641 001

4. வடக்கேமுறி அலிமா>
கீரனூர் ஜாகிர்ராஜா>
எழுத்து பிரசுங்கம்>
அண்ணா நகர்> சென்னை – 40

5. காஃபிர்களின் கதைகள்
கீரனூர் ஜாகிர்ராஜா>
எழுத்து பிரசுங்கம்>
அண்ணா நகர்> சென்னை – 40